DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
**CC.NO. 103/2023**

Deposition of Cross of Pw 1 Dt. 23.03.2026

| | |
|---|---|
| Name | ரகுபதிராகவன் |
| Father's Name | ராஜகோபாலன் |
| Village | குத்தாலம் |
| Age | 71/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 23.03.26
(A1, A2 Present)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ப.சா.2 சண்முகம் எனது வயலில் வேலை பார்க்கும் நபர் என்றால் கூலி வேலைக்கு எல்லா வயலுக்கும் செல்பவர் ஆவார். ப.சா.3 பார்த்தசாரதி எனது மகன் ஆவார். ப.சா.4 சுப்பிரமணியன் எனது அரவை மில்லில் வேலை செய்யும் நபர் என்றால் சரிதான். ப.சா.5 உத்திராபதி பொதுவான நபர் ஆவார். காவல் நிலையத்திற்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி அன்று எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் 12.00 மணிக்கு சென்றோம். அப்போது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் காவல் நிலையத்தில் வாங்கிக்கொள்ளவில்லை. அதன் பின்பு குத்தாலம் மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் சென்றோம். மருத்துவரிடம் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று சொன்னேனா என்றால் சொன்னேன். அதன் பின்பு மயிலாடுதுறை மருத்துவமனைக்கு எப்போது ெ சன்றேன் என்றால் அன்றைய தினமே சென்றேன். குத்தாலம் காவல்நிலையத்திற்கு நான் சென்றபோது மருத்துவமனைக்கு செல்லும்படி மெடிக்கல் மெமோ எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. எனது வயல் ஆற்றங்கரை ஓரமாக உள்ளது என்றால் சரிதான். அருகில் தெரு, வீடு இல்லை என்றால் சரிதான். ஆடு மேய்ப்பவர்கள் ஆற்றங்கரை படுகையில் மேய்த்துக்கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். எனது வயலுக்கு கம்பிவேலி அடைத்து ஆடு, மாடுகள் உள்ளே வராதபடி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ப.சா.2 டிடம் நான் பூச்சி மருந்து வாங்கிக்கொடுத்து ஆடு, மாடு மேய்க்கும் இடத்தில் அடிக்க சொல்லி ப.சா.2 அவ்வாறு பூச்சி மருந்து தெளித்ததில் எதிரிகளின் 4 ஆடுகள் இறந்து ே பாய்விட்டது என்றால் சரியல்ல. ப.சா.2 எனது வயலுக்கு வெளியே உள்ள செடி, கொடிகளில் பூச்சி மருந்து அடித்ததை எதிரிகள் செல்போனில் வீடியோ எடுத்து வைத்துள்ளார்கள் என்றால் எனது வயலுக்கு உள்ளே தான் நான் பூச்சி மருந்து அடிக்க சொன்னேன். காவல் நிலையத்திற்கு நான் சென்றபோது என்னுடன் யார் வந்தார்கள் என்றால் ப.சா.2 சண்முகம் மற்றும் எனது மகன் பார்த்தசாரதியும் வந்தார்கள். அன்றைய தினம் போலிசார் என்னுடன் வந்த நபர்களை விசாரித்தார்களா என்றால் அன்றைய தினம்

ர. ரகுபதிராகவன்.

விசாரிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்தை பார்த்தவுடன் மருத்துவமனைக்கு செல்லும்படி கூறிவிட்டனர். என்னை அடித்ததாக சொல்லப்படும் கல்லை போலிசாரிடம் காண்பித்தேனா என்றால் எனது மில்லில் வேலை பார்க்கும் ப.சா.4 டிடம் நான் சொல்லி அவர் போலிசாரிடம் என்னை எதிரிகள் அடிக்க பயன்படுத்திய கல்லை அடையாளம் காட்டினார். எனக்கு காயம் ஏற்பட்டு எனது சட்டையில் படிந்த ரத்தக்கறைகளை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எனக்கு வயலில் சேற்றில் தடுமாறி கீழே விழுந்து, கீழே கிடந்த கற்களில் மோதி ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யான வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வைத்த பூச்சி மருந்தினால் எதிரிகளின் ஆடு இறந்து விட்டதால் எதிரிகள் என் மீது புகார் கொடுத்து விடுவார்கள் என்ற அச்சத்தில் முன்கூட்டியே நான் எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி அன்று நான் குத்தாலம் காவல் நிலையத்திற்கும், குத்தாலம் அரசு மருத்துவமனைக்கு சென்று நான் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் எந்த ஆயுதத்தை கொண்டும் தாக்கவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனக்கு வேண்டப்பட்டநபர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அவர்களை சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிர்
பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு அவை சரியானதென்று
ஏற்கப்பட்டது

[illegible]

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

**CC.NO. 103/2023**

Deposition of Cross of Pw 3 Dt. 23.03.2026

| | |
|---|---|
| Name | பார்த்தசாரதி |
| Father's Name | ரகுபதிராகவன் |
| Village | குத்தாலம் |
| Age | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 23.03.26

(A1, A2 Present)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

08.11.2022 ம் தேதி அன்று நான் காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் எனது தகப்பனார் அ.சா.1, அ.சா.2 , நானும் சென்றோம். எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் காலை 11.30 மணிக்கு சென்றோம். அப்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் காவல்நிலையத்தில் மருத்துவமனைக்கு செல்லும் படி அறிவிறுத்தியதால் அப்போது புகார் எதுவும் கொடுக்கவில்லை. எந்த மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் குத்தாலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு மருத்துவரிடம் எவ்வாறு காயம் ஏற்பட்டது என்றுகூறினோமா என்றால் கூறினோம். எனது வயலில் மருந்து அடித்துக்கொண்டிருக்கும் போது எதிரிகள் ஆற்றங்கரை ஓரத்தில் ஆடுமேய்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த பகுதியில் தெரு மற்றும் வீடுகள் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு அதன் பின்பு நாங்கள் சென்று புகார் கொடுத்தோமா என்றால் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு குத்தாலம் போலிசார் மறுநாள் வந்து எனது அப்பா அ.சா.1 னிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டதால் நாங்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என்னையும், அ.சா.2 ஐயும் போலிசார் விசாரித்தார்களா என்றால் அன்றைய தினமே மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எனது அப்பாவின் ரத்தக்கறை படிந்த சட்டையை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. போலிசார் எனது அப்பாவின் ரத்தக்கறை படிந்த சட்டையை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கல்லை போலிசார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். ப.சா.2 டிடம், அ.சா.1 பூச்சி மருந்து வாங்கிக்கொடுத்து ஆடு, மாடு மேய்க்கும் இடத்தில் அடிக்க சொல்லி ப.சா.2 அவ்வாறு பூச்சி மருந்து தெளித்ததில் எதிரிகளின் 4 ஆடுகள் இறந்து போய்விட்டது என்றால் சரியல்ல. எனது அப்பா வயலில் சேற்றில் தடுமாறி கீழே விழுந்து, கீழே கிடந்த கற்களில் மோதி ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யான வழக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது அப்பாவை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் எந்த ஆயுதத்தை கொண்டும் தாக்கவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை

R.Parthasarathi

என்றாலும் எனது அப்பா அவரது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

x R. Parthasarathy

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

23/3/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை

x R. Parthasarathy